சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக சார்பில் தமிழக முதல்வர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வேளச்சேரி குருநானக் கல்லூரி கலை அரங்கத்தில் வைத்து பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் பத்திரிகையாளர்கள் இந்து என்.ராம், நக்கீரன் கோபால், ரெங்கராஜ் பாண்டே, காந்தராஜ், கல்கி ப்ரியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிய கருத்தரங்கம் நிகழ்ச்சியை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். கருத்தரங்கத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா மற்றும் எம்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., ரத்னா லோகேஷ்வரன் எம்.சி, எம்.எஸ். ஹரிபாபு, மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார் இ.முருகேசன் ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, எஸ்.ஆர்.செந்தில், நேருநகர் எஸ்.பாட்சா, நா. ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், சைதை ஆ.வரதன், வே.முருகன், க.உமாபதி, ஜி.செல்வராஜ், ஜி.யோவான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

நாள்	நேரம்	சட்டமன்றத் தொகுதி	இடம்
16.03.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	பெரம்பூர்	பிரணிதா பேலஸ், எத்திராஜ் சாமி சாலை, எருக்கஞ்சேரி, பெரம்பூர்.
	மாலை 4.00 மணி	இராதாகிருஷ்ணன் நகர்	செல்வ வாணி மஹால், தண்டையார்பேட்டை மணிக்கூண்டு அருகில்.
23.03.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	இராயபுரம்	'அறிவகம்' திருமண மாளிகை, இராயபுரம்.

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 11-03-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

அ.தமீம் அன்சாரி தலைமை! என்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை! சென்னை தெற்கு மாவட்ட

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் பொதுக் கூட்டம்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – ராஜ கண்ணப்பன் – கோவி.செழியன் மற்றும் பேராசிரியர் பர்வீன் சுல்தானா – தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, மார்ச் 12- கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் அ.தமீம் அன்சாரி தலைமையிலும், பகுதி செயலாளர் எம்.கிருஷ்ண மூர்த்தி எம்.சி., முன்னிலையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. அமைச்சர்கள் மா.சுப்பிரமணி யன், ராஜ கண்ணப்பன், கோவி. செழியன், பேராசிரியர் பர்வீன் சுல்தானா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிறப்புரையாற்றுகின்றனர். துணை மேயர் மு.மகேஷ்குமார், டாக்டர் சுபேர்கான் பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப்பிரிவு சார்பில் தமிழக முதல்வர், கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு நாளை (13.3.2025 வியாழக்கிழமை) மாலை 6 மணியளவில் சைதாப் பேட்டை, கொத்தவால்சாவடி தெருவில் சிறுபான்மை யினர் நல உரிமைபிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் அ.தமீம் அன் சாரி தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம். கிருஷ்ண மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா. அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன் எம்.சி., சிறுபான்மையினர் நல உரிமைபிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக், பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், 142வது வட்ட கழக செயலாளர் எம்.நாகா, 142வது "அ" வட்ட கழக செயலாளர் எஸ். பி.கோதண்டம் ஆகியோர் முன்னிலையில் வெல்வோம் இருநூறு! படைப்போம வரலாறு!! என்ற முழக்கத்துடன் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், தன்னம்பிக்கை சொற்பொழிவாளர் பேராசிரியர் பர்வீன்சுல்தானா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ் குமார், சிறுபான்மையினர் நல உரிமைபிரிவு மாநில செயலாளர் டாக்டர் சுபேர்கான், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், கலைஇலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், கவி தாகௌதமன், வி.பி.ஜானகிராமன், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், வட்ட கழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, அ ட் கோ க ம ல நா த ன், மாவட்ட பிரதிநிதிகள் பால் கார்ரவி, பொன்ஜெய்சிங், கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி. பாபு, பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், எம். அருண், எஸ்.பரத்குமார், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஏ.எஸ். பழனி, எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், எம்.மாறன், கே.தாஸ், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், மாவுமில் ஸ்ரீதர், கேபிள் காளி, டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்மந்தம், கு.கார்த்திகேயன், டி.ராஜ்குமார், த.மணி, என். தீனதயாளன், வெ.புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், வெ.கிஷோர்குமார், பி.ஆர். துரைராஜ், ஆர்எஸ்டி.சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், எம்.ஜி.மதிவாணன், ஸ்டெல்லாமேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி, கழக நிர்வாகிகள் ஆர் பர்முனுசாமி, எப்.சாகுல்அமீது, கேபிள்முருகன், எம்.கதிர், கே.முருகேசன், வி.பி.காந்தி, கே.கசாலி, ஆர்.மோகன், கே.விஜய், எம்.ஷேக்தாவூத், கே.சி.பழனிபாரதி, வீடியோ எஸ்.எழில், ஆர்.எல்.காந்தன், பி.தேவிகா, எம்.பாலாஜி, ஆம்பூர்ரவி, பாரதிபாஸ்கர், பிரபு, அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆர்.ஜி.கற்பகம், ஆர். தனா, பிடிசி குமார், ஆர்.எஸ். ரமேஷ், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில்எஸ்.மணி, ஆட்டோஜான், சார்புசரவணன், பைரவமூர்த்தி, இரா. பாபு, பூ.பாஸ்கர், த.ஜெயராமன், எஸ்.விவேக்செல்வம், மாரியப்பன், கோகுல்குமார், அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள் ஐ.பழனி, சி.சுரேஷ், எம்.மாதவன், சோடா மனோகர், ஆட்டோ கோவிந்தராஜ், டெய்லர் குப்புசாமி, பி.சிட்டிபாபு, சேட் ராஜா, தனசேகர், எஸ்.பழனி, லோகநாதன், எம்.மாரி, பஷீர் அகமது, பூக்கடை பன்னீர், கழக எஸ்.ரமேஷ், சசிகுமார், சுப்பிரமணி, ஜெயகுமார், தீனா, அமுலு, அறிவழகி, லட்சுமணன், கணபதி, உதயகுமார், ஆர்.டி. மூர்த்தி, நரேஷ், பிரபு,

பெரியண்ணன், இந்து உதயா, ரவி, பெருமாள், கேபிள் மணி, ராமு, த.ரமேஷ், சுரேஷ், கார்த்திக், முத்து, வட்ட செயற்குழு உறுப்பினர்கள் உமாசங்கர், ஜெய்சிங், ஆசைத்தம்பி, பிரேம் சிங், ஆனந்த், சம்பத், எழிலரசன், பாபுபாட்ஷா, ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இந்நிகழ்வில் ஜி.ஜே.மோசஸ், கே. அன்சர்கான், கே.சையத்அன்சாரி, எம்.ஜெ. கெவின், ஜோ. அந்தோணி, ஐ.குமார், எஸ்.கரிமுல்லா, எஸ்.ஜெ.அம்புரோஸ், எம்.எஸ்.ஷேக்தாவூத், ஜே. சையது கையூம் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

கழக முன்னோடிகள் கல்யாண் குமார், வளர்மதி, சபானா, எஸ்.பி.குமார் சகோதரர்கள், முத்துராமன், காமராஜ், ஜீவா, டான்சிபாபு, சாமி, பூமாலை, ஜோதி, கிருஷ்ணன், மார்க்கெட் கண்ணன், எஸ்.பஷீர், பழக்கடை மனோகர், அமாவாசை, ராம்ஜி, மோகன், அப்துல்கனி, ஜி. ரமேஷ், கலாம் கோபி, முத்து, தாலிப், மெடிக்கல் முருகன், சாகீர், ஜெய் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்க உள்ளனர்.

கூட்டத்தின் நிறைவாக வட்ட கழக பொருளாளர் ஆர். கோபி, பகுதி துணை அமைப்பாளர் சி.சுரேஷ், ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

அன்னம் தரும் 'அமுதகரம்' 20-வது நாள்!

வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில்–அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மார்ச் 12 - முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 20 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளில் நேற்று (11.3.2025) வில்லிவாக்கம் மேற்கு பகுதி 1) பாரதி நகர் கிழக்கு, ஏரிக்கரை, வில்லிவாக்கம், (94அ வட்டம்) 2) எம்பார் நாயுடு 2வது தெரு, ஐ.சி. எஃப்., (95அ வட்டம்) ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு

நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமா ட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின், வே.வாசு, லதா வாசு. எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வ வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி வானவில் விஜய், எம்.சுரேஷ், வட்டச் செயலாளர்கள் எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே. பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சி. சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி (எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப. லோகு பாபு, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம. அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்கு மார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட உள்ள அநீதியை மக்களிடம் கொண்டு செல்ல

செம்பாக்கத்தில் மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் – கவிஞர் நன்மாறன்–பத்மபிரியா கண்டன உரை!

காஞ்சிபுரம், மார்ச்.12- நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பால் ஒன்றிய மோடி அரசால் தமிழ்நாட்டுக்கு ஏற்பட உள்ள அநீதியை இழைக்கும் ஒன்றிய மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் தாம்பரம் மாநகரம், செம்பாக்கம் காமராஜபுரம் பேருந்து நிலையம் அருகில் இன்று 12 ஆம் தேதி மாலை நடைபெறுகிறது.

இக்கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், கவிஞர் நன்மாறன், பத்மபிரியா கண்டன உரையாற்றுகிறார்.

நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பால் ஒன்றிய மோடி அரசால் தமிழ்நாட்டுக்கு ஏற்பட உள்ள அநீதியை மக்களிடம் கொண்டு செல்வ தமிழ்நாடு போராடும்! தமிழ் நாடு வெல்லும்! என்ற தலைப்பில் ஒன்றிய மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டன பொதுக்கூட்டம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், தாம்பரம் மாநகரம் செம்பாக்கம் காமராஜபுரம் பேருந்து நிலையம் அருகில் இன்று (12-ஆம் தேதி) மாலை 6.00 மணியளவில் தாம்பரம் மாநகர செயலாளர் - தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.ராஜா தலைமையில் நடைபெறுகிறது.

செம்பாக்கம் தெற்கு பகுதி கழக செயலாளர், செம்பாக்கம் இரா.சுரேஷ் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கண்டன பொதுக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கண்டன ஏழுச்சி உரை ஆற்றுகிறார். தலைமைக் கழக பேச்சாளர் நன்மாறன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் செல்வி. பத்மபிரியா ஆகியோர் இக்கூட்டத்தில் கண்டன உரையாற்றுகிறார்.

தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதிய லிங்கம், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன் ஆதிமாறன்.

கழக தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ், தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னுராம், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர்கள் அ.தமிழ்மாறன், என். நவீன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய்ஜெயகாந்த் பாரதி.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்.இதயவர்மன், ஆர்.டி.அரசு, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், ஜி.கே.ரவி, எம். டி.லோகநாதன், நகரச் செயலாளர்கள் ஜெ. சண்முகம், டி. பாபு, எஸ்.நரேந்திரன், எஸ். ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக்.

பகுதி செயலாளர்கள் என். சந்திரன், பி.குணாளன், வே. கருணா நிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் சேகர், டி. காமராஜ், எஸ்.இந்திரன், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ். பெர்னாட்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே. இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், மூவரசம்பட்டு சதீஷ், க.தேவேந்திரன், ஆர். எஸ்.சங்கர், கே.எத்திராஜ், எம். ஆர்.சீனிவாசன், மா.கணேஷ் பாபு, இரா.பாஸ்கரன், எம். செல்வகுமார், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, சே.அருள் தேவி.

பேரூர் செயலாளர்கள் மு. தேவராஜ், ஆர்.சதீஷ்குமார், ஜி.டி.யுவராஜ், தாம்பரம் மாநகர நிர்வாகிகள் இரா.நரேஷ் கண்ணா, பொன்.சதாசிவம், வ.விஜயரங்கன்.

நகரமன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் சரஸ்வதி மனோகரன், உதயா கருணாகரன், பேரூராட்சி தலைவர் சாந்தி சதிஷ்குமார், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் காயத்ரி அன்புச்செழியன், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர்கள் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், சத்தியா சேகர், பி.பிரசாத், எஸ்.ஏ.பச்சையப்பன், மாலதி போஸ்கோ, நகர மன்ற துணை தலைவர்கள் தே.திருநாவுக்கரசு, ஜி.கே. லோகநாதன், சித்ரா கமலக்கண்ணன், பேரூராட்சி துணைத் தலைவர்கள் வீ. அருள்மணி, ஆர்.பரசுராமன், இந்திராணி சுப்பிரமணியன்.

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் வீ.விஜய குமார், ப.இராமமூர்த்தி, டி. கே.கமலகண்ணன், கே.மணி கண்டன், கோ .ஜானகிராமன், தி.க.பாஸ்க ரன், எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞானபிர காசம், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர். ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர். சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம், மாநகர இளைஞர் அணி நிர்வாகிகள் பி.கே.ஏ.சத்தியபிரபு, ச.பிரபு, ஜெ.இன்சமாம், வீ.கார்த்திக், ச.ராஜேஷ், வே.சிவசுப்பிரமணியன் தாம்பரம் மாநகராட்சி வட்டக்கழக செயலாளர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும்

செம்பாக்கம் தெற்கு பகுதி அவைத்தலைவர் க.ராமச்சந்திரன் துணை செயல்ளர்கள் ச.லட்சுமிபதி ராஜா, தேவ.முத்துமுருகன், கல்யாணி மணிவேல், பொருளாளார் வ.அன்பழகன், மாநகர பிரதிநிதிகள் டி.தட்சிணா மூர்த்தி, கு.தமிழ்செல்வன், வெங்கடசாமி, ம. சீனிவாசன், சி.ராஜேந்திரன், உள்ளிட்ட கழகத்தினர் இக்கண்டன பொதுக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

செம்பாக்கம் காமராஜபுரத்தில் இன்று 12ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் நடைபெறும் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றியநகரபகுதிபேரூர் கழக செயலாளர்கள், கழக அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு வந்து பங்கேற்க வேண்டுமென்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்களுக்குச் செலவிட வேண்டிய நிதியை, மாநில அரசுக்கு எதிராக பழிவாங்கும் கருவியாகப் பயன்படுத்துவதா?

தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்!

மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 12- "தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்" என்று நாடாளுமன்ற - மக்களவையில் நேற்று, தென் சென்னை தொகுதி கழக நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்.

மக்களவையில் கேள்வி நேரத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் பேசியதாவது:-

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட சுமார் 2000 கோடி ரூபாய் PM SHRI திட்டத்திற்கான நிதி, NEP 2020ஐ தமிழ்நாடு அரசு எதிர்த்ததன் காரணமாக மற்ற மாநிலங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, எங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்

துள்ள கவலையை நான் இங்கு எழுப்ப விரும்புகிறேன். இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு அடிக்கப்படும் சாவுமணி ஆகும் . மேலும், உங்கள் மூலமாக அமைச்சரிடம் கேட்க விரும்புவது, பள்ளிக் கல்வி மாணவர்களுக்காகச் செலவிட வேண்டிய நிதி ஒதுக்கீட்டை மாநில அரசுக்கு எதிராக பழிவாங்கும் கருவியாக பயன்படுத்துவது சரியானதா? இது உண்மையில் பள்ளி மாணவர்களின் கல்வியைப் பாதிக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மத்திய அரசிடம் கேட்க விரும்பு கிறேன், சட்டமாக்கப்படாத கொள்கையை நிராகரிப்பதற்காக எந்த மாநிலமும் நிதி முடக்கத்துக்கு ஆளாக மாட்டாது என்ற உறுதிமொழியை பாராளுமன்றத்திற்கு அளிக்குமா?

இந்த விஷயம் வெறும் நிதி பற்றியது அல்ல, இது நமது அரசியலமைப்பின் அடிப்படை அம்சமான கூட்டாட்சி முறை பற்றியது. மாநிலங்களின் அதிகாரங்களை மதித்து, அவற்றின் தனித்துவமான தேவைகளை புரிந்துகொள்வது மிக முக்கியம். தமிழ்நாடு எப்போதும் மும்மொழிக் கொள்கையை எதிர்த்து வந்துள்ளது, இது எங்கள் மாநிலத்தின் நிலைப்பாடு.

கல்வி என்பது மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் முக்கிய காரணி. அரசியல் வேறுபாடுகளின் பெயரால் மாணவர்களின் வாழ்க்கையை பாதிக்க அனுமதிக்க முடியாது. நாங்கள் கொள்கை அடிப்படையில் NEPஐ எதிர்க்கிறோம், ஆனால் அதற்காக எங்கள் மாணவர்கள் தண்டிக்கப்படக்கூடாது.

இது தமிழ்நாட்டின் பிரச்சினை மட்டுமல்ல. இன்று தமிழ்நாடு இந்த பாதிப்புக்கு உள்ளாகியிருந்தால், நாளை வேறு மாநிலங்களும் இதே நிலைக்கு தள்ளப்படலாம். எனவே, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், கொள்கை வேறுபாடுகளை நிதிக் குறைப்புக்கான காரணமாகப் பயன்படுத்தக்கூடாது என்றும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் குறிப்பிட்டார்.